# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை-600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 0464/2017/பே

ஆணை எண்: 166/2017

நாள்: 20/05/2017

Mr. A.Starwin,
Vice President,
Kallukoottam. --- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கல்லுக்கூட்டம் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். -- எதிர் மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், கல்லுக்கூடம் பேரூராட்சியைச் சேர்ந்த திரு ஏ.ஸ்டார்வின் என்பவரின் 04.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 04.04.2017 அன்று பெறப்பட்டு 464/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், கல்லுக்கூட்டம் பேரூராட்சியைச் சேர்ந்த திரு. ஏ.ஸ்டார்வின் கல்லுக்கூடம் பேரூராட்சி செயல் அலுவலர் மீது சில புகார்கள் கூறி முறையீட்டு மனுவை சமர்ப்பித்துள்ளார்,

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் அவர்களுக்குத் தாக்கல் செய்யப்படும் முறையீட்டு மனுக்களை 2015ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (குற்றச்சாட்டு தாக்கல், விசாரித்தல் மற்றும் முடித்தல்) விதிகளில் விதி 4 ன்படி குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் கட்டணமாக ரூபாய் பத்துக்கான நீதிமன்ற வில்லையுடன் தாக்கல் செய்யப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட விதியின்படி மனுதாரர் முறையீட்டு மனுவினைத் தாக்கல் செய்யாததால் அவரது மனு குறைபாடான மனு என கருதப்பட்டு நிராகரித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.
23/6/17

பெறுநர்
Mr. A.Starwin,
Vice President,
Kallukoottam.

22/6/17

23/6/17